1989 ஏப்ரல் 29]

(ஆ) கன்னியாகுமரி மாவட்டம், அழகப்பபுரத்தில் வானிலிருந்து இரத்தத் துளிகள் விழுந்தது குறித்து.

திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கன்னியாகுமரி மாவட்டம் அழகப்பபுரம் என்னும் கிராமத்தில் வானிலிருந்து துர்நாற்றம் வீசும் ரத்தம் மழைபோல் கொட்டியதால் அப்பகுதி மக்களின் நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

கன்னியாகுமரி மாவட்டம் அழகப்பபுரம் கிராமத்தில் 28–3–1989 முதல் 30–3–1989 வரை இரத்தம் போன்ற துளிகள் விழுவது பற்றி பரிசீலிக்கப்பட்டது. 28–3–1989 அன்று சுமார் 11.30 மணியளவில் வகுப்புகள் நடந்து கொண்டிருக்கும் தருணத்தில் செயிண்ட் ஆண்டனி பள்ளியில் 5-வது வகுப்பு படித்துக்கொண்டிருக்கும் ஜி. அனிதா என்ற சிறுமியின் மீது சில இரத்தத் துளிகள் விழுந்தன. அந்த வகுப்பறையில் ஓடுகள் பொருத்தப்பட்டிருந்தன. எனவே அந்த வகுப்பறை வேறு கட்டிடத்திற்கு மாற்றப்பட்டது. ஆனால் அங்கும் 5 சிறுமிகள் மீது இரத்தத் துளிகள் விழுந்ததால் அந்தப் பள்ளிக்கு விடுமுறை அளிக்கப்பட்டது.

29–3–1989 அன்று சுமார் 7 மணியளவில் மளிகை சாமான்கள் வாங்கிய 7 மனிதர்களின் மீது சில இரத்தத் துளிகள் விழுந்தன. இந்த மளிகைக் கடையின் மேற்புரம் முழுவதும் இரத்தக்கறை படிந்திருந்தது. தீவிரமாக விசாரித்ததில் இந்தத் துளியினால் எந்தவித சுகாதாரக்கேடும் விளைவிக்கவில்லை. இந்த நிலைமை 29–3–1989ல் முடிவடைந்துவிட்டதால் 30–3–1989 முதல் பள்ளி நடைபெற்று வருகிறது.

இது குறித்து கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அறிக்கையும் கேட்கப்பட்டது. 29–3–1989 மற்றும் 30–3–1989 ஆகிய இரு தினங்களில் அழகப்பபுரம் கிராமத்தில் சுமார் 75 பேர்களின் மீது இரத்தம் போன்ற துளிகள் விழுந்ததாகவும், விழுந்த சில துளிகளை எடுத்து அங்கிருந்த சோதனைக் கூடத்தில் சோதனை செய்யப்பட்டதில் மனித இரத்தத்திற்கும் அதற்கும் சில ஒத்த தன்மை இருப்பதாகவும் அறியப்பட்டதென்றும், அவைகள் எப்படி, எவ்வாறு, எங்கிருந்து விழுந்தனவென்று கண்டுபிடிக்க முடியவில்லை என்றும், இதனால் அப்பகுதியில் சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏதும் எழவில்லை என்றும், எவரும் பாதிக்கப்படவும் இல்லை என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவிக்கின்றார்.

திரு. பொன். விஜயராகவன் : தலைவர் அவர்களே, இந்த விஞ்ஞான யுகத்தில் புரியாத புதிராக, கடந்த மாதம் ஏறத்தாழ 28–3–89-லிருந்து 30–3–89 வரையிலும் இரண்டு, மூன்று நாட்கள் தொடர்ந்து அந்த கிராமத்தில் ஏறத்தாழ 75 நபர்களின் மேல் ரத்தம் கொட்டியிருக்கிறது. அங்கே: இருக்கக்கூடிய பள்ளியில் படிக்கக்கூடிய மாணவர்களைக் கூட, மாணவிகளைக் கூட, ரத்தம் கொட்டிய காரணத்தினாலே விடுமுறை அளித்திருக்கிறார்கள். அங்கே இருக்கக்கூடிய ஒரு கடையினுடைய கூரை முழுவதும் ரத்தமாகத் தோய்ந்திருக்கிறது. ஆனால் அரசாங்கத்தினுடைய சார்பில் இந்த அறிக்கை கொடுத்திருக்கின்றபோது இதனுடைய ரத்தத்தை ஆய்வு செய்ததில் மனித ரத்தத்திற்கும், ஆய்வு செய்யப்பட்ட ரத்தத்திற்கும் சில ஒத்த தன்மைகள் இருப்பதாகவும், இங்கே குறிப்பிட்டு இருக்கின்றார்கள். ஆனால் எப்படி அந்த ரத்தம் வந்தது, எங்கேயிருந்து வந்தது, என்ன என்பது பற்றி அரசாங்கத்திற்கே தெரியவில்லை. விஞ்ஞான முறைப்படி மிகப்பெரிய விஞ்ஞானிகளையும், மிகப் பெரிய ஆய்வாளர்களையும் வைத்திருக்கக்கூடிய அரசாங்கத்தில் இதைக் கண்டுபிடிக்க முடியாதததற்கு என்ன காரணமோ தெரியவில்லை. அதைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சியிலே அரசாங்கம் ஈடுபடுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது 28-ஆம் தேதி முதல் 30–3–89 வரை இந்த நிகழ்ச்சிகள் அங்கொன்றும், இங்கொன்றுமாக நடைபெற்றிருக்கின்றன. உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவரும் அந்த இடத்திற்கு விரைந்து சென்று அதற்கான நடவடிக்கைகளிலே ஈடுபட்டு இருக்கிறார்கள். மருத்துவத் துறையைச் சார்ந்தவர்களும் அங்கே சென்று ஈடுபட்டிருக்கிறார்கள். அந்த மூன்று நாட்களுக்குப் பிறகு, அந்த நிகழ்ச்சி அங்கே நடைபெறவில்லை. மக்களுக்கு இருந்த பீதியும் இப்போது கிடையாது. இருந்தாலும் கூட, அதை என்னவென்று கண்டுபிடிக்கமுடியாத ஒரு சூழ்நிலையிருக்கிறது. ஆகவே, இதுபோன்று மேலும் ஒரு முறை நிகழும் என்று சொன்னால், அதைப் பரிசோதனையாகக் கூட செய்து பார்த்து, அது என்னவென்று கண்டுபிடிக்க ஆய்வாளர்களுக்கும் ஒரு வாய்ப்பு இருக்கும். அது உடனடியாக நின்று விட்டதனால், கண்டுபிடிக்க முடியாத சூழ்நிலைகளும் இருந்து இருக்கக்கூடும். ஆகவே, இது குறித்து இப்போது அங்கே பீதி இல்லாத காரணத்தினால், எந்தவிதமான பயமும் இல்லாத காரணத்தினால், இதைப்பற்றி தீவிரமான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பொன். விஜயராககவன் : தலைவர் அவர்களே, அந்த கிராம மக்கள் மத்தியிலே எந்த பீதியும் இல்லை என்று சொல்வது ஏற்றுக்கொள்ளமுடியாத ஒன்று. ஏற்கெனவே நடைபெற்ற

1989 ஏப்ரல் 29] [திரு. பொன். விஜயராகவன்]

சம்பவத்தினால் அந்தக் கிராமம் முழுவதும் ஏதோ ஒரு தவறு நடைபெற்று விட்டது போலவும், ஏதோ மாயமோ, மந்திரமோ, குறளி வித்தையோ என்னவோ என்கின்ற அளவிற்கு ஒரு மிகப் பெரிய பீதி இன்னும் ஏற்பட்டிருக்கிறது. ஒரு வேலை அரசாங்கத்தினர் ஒத்துக்கொள்வார்களோ, என்னவோ எனக்குத் தெரியாது. விஞ்ஞானத்தின் மூலமாகவோ, எந்த ஆய்வின் மூலமாகவோ நடைமுறைப்படுத்த முடியாததை நாட்டு மக்கள் நம்பிக்கொண்டு இருக்கக்கூடிய, ஏதோ மந்திரவாதம், தந்திரம் என்று சொல்லக்கூடிய அடிப்படையிலேயோ, குறளி வித்தை என்ற அடிப்படையிலேயோ அதைப் பார்த்து அதற்கு ஒரு முடிவு, பரிகாரம் ஏற்படுத்துவதற்கான முடிவுகளை மேற்கொண்டு, கிராம மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய பீதி, பயம் இவைகளைத் தடுப்பதற்கு அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அறவே அந்த பயம் மக்களிடம் விலகியிருக்கின்றது. அப்படி மாண்புமிகு உறுப்பினர் சொல்வது உண்மையாக இருக்குமென்று சொன்னால், அறிவியல் முறையில் அதைத் தீர்ப்பதற்கு என்ன முயற்சிகள் எடுக்கப்படமுடியுமோ அதை இந்த அரசு எடுக்குமென்று மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. சட்ட முன்வடிவுகள்.

(அ) நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி, மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.